செ.வெ.எண்: 280/2016 நாள்: 13.05.2016

# <u>செய்தி குறிப்பு</u>

16.05.2016 அன்று நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலில் பாதுகாப்பு பணிக்கு பெயர் பதிவு செய்துள்ள முன்னாள் படை வீரர்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்ட ஆணைப்படி 14.05.2016 அன்று காலை 09.00 மணிக்கு நாகர்கோவில் மறவன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள காவல்துறை ஆயுதப்படை மைதானத்திற்கு வருகை தந்து பணியில் சேர்ந்திட வேண்டும். இப்பணிக்கு சீருடை தேவையில்லை சிவில் உடையிலேயே பணிபுரியலாம்.

இப்பணிக்கு அரசு மற்றும் தேர்தல் ஆணையத்தால் முன்னாள் படை வீரர்களுக்கு நாள் ஒன்றிற்கு மதிப்பூதியம் ரூ.750/- இளநிலை படை அலுவலர்களுக்கு மதிப்பூதியம் ரூ.900/- வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப் பணி 14.05.2016-ல் இருந்து 17.05.2016 வரை (4 நாட்கள்) நடைபெறும்.

இத்தேர்தல் பாதுகாப்பு பணிக்கு பெயர் பதிவு செய்து உரிய ஆணை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் இதுவரை பெயரை பதிவு செய்திடாத, தேர்தல் பணிக்கு வர விருப்பமுள்ள முன்னாள் படை வீரர்கள் தங்களது அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் மேற்படி மைதானத்தில் 14.05.2016 அன்று காலை 09.00 மணிக்கு நேரில் ஆஜராகி பாதுகாப்பு பணியில் சேர்ந்திடலாம் எனவும் மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் மேஜர் வா.ஸ்ரீ.ஜெயகுமார் (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**